



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி , லக்காபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட வரும் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், முதன்மை கல்வி அலுவலர் மான்விழி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நெல்லியாளம் நகரக் கழகத்தின் சார்பாக என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற திட்டத்தின் கீழ் நடைபெற்ற வாக்காளர் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் அடங்கிய கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ் குமார் கலந்து கொண்டு அரசின் நலத்திட்டங்களையும் தேர்தல் பணிகள் குறித்தும் விளக்கிப் பேசினார். உடன் நகர கழக செயலாளர் சேகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் காசிலிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

# மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' கூட்டத்தை நடத்துவோம்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை டிச 15.

மயிலாடுதுறை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன். இராம். இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து பேசினார்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் மங்கை எம்.சங்கர், என். இளைய பெருமாள், செல்லசேது. ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பி.எம்.அன்பழகன், மூவலூர் எம். மூர்த்தி ஏ.ஆர்.ராஜா,.அப்துல்மாலிக், ப.முருகமணி, ஞான.இமயநாதன், கு.வைத்தியநாதன், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர். பஞ்சு.குமார், நகர கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன் பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், எஸ்.கே. முத்துராஜா, எம்.அன்புச்செழியன், என் .அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழகம் 7 வது முறையாகவும், தளபதி இரண்டாவது முறையாகவும் ஆட்சி அமைக்க கழகத் தலைவர் தளபதி அவர்கள் 2026 சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளை வெல்வோம் என்ற அறிவிப்பிக்கு இணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை பூம்புகார் சீர்காழி வாங்கிய 3 சட்டமன்ற தொகுதிகளையும் கழகம் வென்றிட என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தை அந்தந்த வாக்குச்சாவடியில் நடத்திடுவது என்றும். இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள். சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள செய்து என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் சிறப்பாக நடத்திட வேண்டும் என்றும் கூட்ட ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் சிறப்பாக செய்து விட வேண்டும் என்றும், கழகநிர்வாகிகள், கழகத்தினர் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலினை மீண்டும் முதல்வரக்கிட இப்பொழுது இருந்ததே தேர்தல் பணியாற்றியது என்றும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் சாதனையாளர் விருது வழங்கும் விழா!

## விருதுகளை வழங்கி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!



திருச்சி, டிச. 15-

DCM 48 என்ற தலைப்பில் தமிழக துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் இதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்ட மற்றும் மாநகர வர்த்தக அணி சார்பில் சாதனையாளர் விருது வழங்கும் விழா திருச்சி பால் பண்ணை அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மேலும் விழாவிற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் செந்தமிழ் செல்வன் மற்றும் மாநகர அமைப்பாளர் கே பி கே சரவணன் ஆகியோர் தலைமை வகித்தனர் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் மாவட்ட வர்த்தக அணி தலைவர் பாலாஜி வரவேற்றார்.

மேலும் இவ் விழாவில் சிறப்பு விருந்தினராக திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு சாதனையாளர்களை கௌரவித்து அவர்களுக்கு விருது வழங்கி விழா பேருரை ஆற்றினார்

மேலும் இந்த விருது வழங்கும் விழாவில் மாநகர செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் மாவட்ட துணைச் செயலாளர் செங்குட்டுவன் மற்றும் வர்த்தக அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் , கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

விழாவில் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றியதாவது

திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் தமிழக துணை முதல்வர் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் 48 நிகழ்ச்சிகள் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டு இன்று 24 வது நிகழ்வாக நமது திருச்சி மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 48 சாதனையாளர்களுக்கு திருச்சி தெற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் விருது வழங்கும் விழா நடைபெற்று வருவதாகவும் மேலும் இவர்களைப் பார்த்து மற்றவர்கள் இளைய சமுதாயத்தினர் சாதனை புரிய வேண்டும் என்பதற்காக இந்த விருந்து வழங்கப்படுவதாகவும் மேலும் உழைப்பால் உயர்ந்தவர்கள் நீங்கள் அனைவரும் என்றும் உங்களால் இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்றும் இந்தியாவிலேயே இரட்டை இலக்கு பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு தான் முதலிடத்தில் உள்ளதாகவும் மேலும் நமது மாநிலம் முதலிடம் ஆக வருவதற்கு காரணம் தமிழக முதல்வர் தான் என்றும் நமது தமிழக முதல்வரின் இலக்கு பொருளாதாரத்தில் 2030 ல் ஒரு ட்ரில்லியன் அகாடமியை தொட வேண்டும் என்ற இலக்கை சாதித்துக் காட்ட வேண்டியவர்கள் நீங்கள்தான் என்றும், மேலும் தற்பொழுது மதுரையில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் அவர்கள் 36 ஆயிரத்து 660 கோடி ரூபாய் முதலீட்டை கொண்டு வந்துள்ளதாகவும் இதனால் 34 லட்சம் இளைஞர்கள் வேலை வய்ப்பு வழங்க வழிவகை செய்து வந்துள்ளதாகவும் இந்தியாவிலேயே அதிக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதில் முதலிடம் தமிழ்நாடு தான் என்று ரிசர்வ் வங்கியே கூறியுள்ளதாகவும் எனவே நாம் அனைவரும் முதல்வரின் கரத்தை வலுப்படுத்தி இந்தியாவிலேயே தமிழநாட்டின் பொருளாதாரத்தை முதலிடமாக கொண்டு வருவதற்கு பாடுபட வேண்டும் என்றும் மேலும் இன்றைய பிறந்த நாள் விழா நிகழ்ச்சி காணும் தமிழக துணை முதல்வர்கள் பல்லாண்டு வாழ நாம் அனைவரும் வாழ்த்துவோம் என எடுத்துரைத்தார்.



தஞ்சை பகுதிக்கு புதிய வந்தே பாரத் ரயில்களை இயக்க வேண்டுமென ஒன்றிய ரயில்வே அமைச்சரிடம் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி கோரிக்கை மனுவை அளித்தார்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# மனவளர்ச்சி குன்றியோர் மையத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

நாமக்கல். டிச.15-

நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மனவளர்ச்சி குன்றியோர் மறுவாழ்வு மையத்தில் அறுசுவை உணவு வழங்கினர்.

திமுக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி ஆலோசனையின் பேரில் திருச்செங்கோடு சேலம் ரோட்டில் உள்ள எலிம் மனவளர்ச்சி குன்றியோர் மறுவாழ்வு மையத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். பாலாஜி தலைமையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பூப்படை சுந்தர், நவலடி ராஜா, மல்லை ஜெகதீஷ், கதிரவன் சேகர், முரளி, கார்த்திகேயன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி அரசு பெண்கள் கலைக் கல்லூரி வளாகத்தில், நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் 2 ஆவது கட்ட விரிவாக்க நிகழ்ச்சியில், 40,594 மகளிருக்கு கலைஞர் உரிமை தொகை பெறுவற்கான ஏ.டி.எம். கார்டுகளை சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், பிரகாஷ், தினேஷ் குமார் , ராமசந்திரன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, நாகராஜ், டேம்.வெங்கடேசன், உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்



திருத்துறைப்பூண்டி ஒன்றியம் கொத்தமங்கலம் ஊராட்சியில் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் நா. இளையராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், பொதுக்குழு உறுப்பினர் செல்வ.ஜெயதேவன் ஆகியோர்களின் ஆலோசனை களின்படியும் பேரறிஞர் அண்ணா படிப்பக புதிய கட்டிட கால்கோள் விழாநடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ப. பிரகாஷ் தலைமை ஏற்று அடிக்கல் நாட்டினார். அனைத்து கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

# கொளத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை,டிச.15–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 297 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (13.12.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 66அ, காமராஜர் நகர், காந்தி நகர் சந்திப்பு, திரு.வி.க நகர் பஸ் நிலையம் எதிரில், 2) வட்டம் 67, சுப்ரமணிய தோட்டம், பெரம்பூர், சென்னை ஆகிய பகுதி களில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இதுதான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி, ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சி 62 வது வாக்குச்சாவடியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் கலந்து கொண்டு வாக்குச்சாவடி அளவில் நடைபெறும் வியூகம் வகுப்பதற்கான வழிமுறைகளை எடுத்து கூறினார் . கூட்டத்தில் 62,வது வாக்குச்சாவடிக்குட்பட்ட BLA2 , BLC, BDA ஆகியோர்களிடம் வாக்குச்சாவடியில் உள்ள குறை நிறைகளை கேட்டு அறிந்தார்.



கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி ஆலோசனையின் பேரில் திருச்செங்கோடு எலிம் மனவளர்ச்சி குன்றியோர் மறுவாழ்வு மையத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி தலைமையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பூப்படை சுந்தர், நவலடி ராஜா, மல்லை ஜெகதீஷ், கதிரவன் சேகர், முரளி, கார்த்திகேயன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.